

## மோசடிகளின் முதலிடம் குஜராத் மாடல்!

குஜராத் மாநிலத்தில் இருந்து விதவிதமான மோசடிகள் ஒவ்வொரு நாளும் வெளிவந்துகொண்டே இருக்கின்றன. ஏற்கெனவே, நீட் தேர்வுகளில் நடைபெற்ற முறைகேடுகள் அம்பலமாகி, நாடெங்கும் விவாதிக்கப்படும் நிலையில், குஜராத்தில் நடைபெற்ற ஒரு முறைகேடு, மீண்டும் இந்தியாவை அதிர வைத்துள்ளது.

குஜராத் அரசுப் பள்ளிகளில் பணியாற்றிய 50-க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் நாட்டை விட்டு வெளியேறிய பிறகும் தொடர்ந்து ஊதியம் பெற்று வந்துள்ளனர். அதிலும் பணியில் இருந்து விலகி, அமெரிக்காவில் குடியேறிய பாவ்னா படேல் என்பவர், சுமார் 8 ஆண்டுகளாக ஊதியம் பெற்று வந்ததும் தெரிய வந்துள்ளது

ஊடகங்கள் வெளியிட்ட செய்தியை அடுத்து, 9 மாதங்களுக்கும் மேலாகப் பணிக்கு வராத சுமார் 135 அரசுப் பள்ளி ஆசிரியர்களை குஜராத் மாநில அரசு சமீபத்தில் இடைநீக்கம் செய்துள்ளது.

‘குஜராத் மாநிலம்தான் இந்தியாவுக்கே முன்னோடி’ என்று பொய்ப் பிரச்சாரம் செய்துதான் குஜராத் முதல்வராக இருந்த மோடி, 2014-இல் பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்தப்பட்டார். குஜராத்தில் பா.ஜ.க.தான் பல ஆண்டுகாலம் ஆட்சி செய்து வரும் நிலையில், மோசடிகளில்தான் குஜராத் முதன்மை மாநிலமாக இருக்கிறது என்ற உண்மை வெளியாகியுள்ளது.

## ஃப்ளாஷ்பேக்





எஸ்.என்.தியாகராஜன்

### எருக்கஞ்சேரி இளைஞர் அணி!

1986-ஆம் ஆண்டு, இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்கள் இளைஞர் அணிச் செயலாளராக இருந்த போது, அவர்களின் வழிகாட்டுதல்களோடும் வாழ்த்துகளோடும் வட சென்னை எருக்கஞ்சேரி ஒன்றாவது வட்டம் கண்ணதாசன் நகரில் இளைஞர் அணியைத் தொடங்கும் வாய்ப்பைப் பெற்றேன். அந்தக் கூட்டத்திற்கு, அப்போதைய அமைப்புச் செயலாளர் அண்ணன் என்.வி.என்.சோமு வருகை தந்து தொடங்கி வைத்தார். அப்போது இளைஞர் அணி உடன்பிறப்புகள் அவரோடு புகைப்படம் எடுத்துக் கொண்டோம். என்.வி.என்.சோமு அவர்கள் என் தோளில் கை போட்டுக் கொண்டது எல்லையில்லா மகிழ்ச்சி அளித்தது. வட்டச் செயலாளர் காசிநாதன், கந்தன், ரவி ஆகியோர் உடனிருந்தனர்.

**– எஸ்.என்.தியாகராஜன், நானாமடை,**
**இளையான்குடி, சிவகங்கை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### உயிருள்ள குதிரை!

1979-ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 19-ஆம் தேதி, சென்னைக்கு வந்த பிரதமர் மொரார்ஜி தேசாய், “நாட்டு மக்கள் அனைவரும் இந்தி படிக்க வேண்டும்” என்றும், “இந்தி எதிர்ப்பு என்பது செத்தக் குதிரை” எனவும் பேசி இருந்தார். அப்போது, திருச்சியில் ஒரு நிகழ்ச்சியில் பேசிய கலைஞர், “26-ஆம் தேதி முதல் இந்தி எதிர்ப்புக் குதிரை பாய்ந்து செல்லும்” எனக் கூறினார். அதே தேதியில், தமிழ்நாடு முழுவதும் அன்று இந்தித் திணிப்பு எதிர்ப்பு ஊர்வலம், பொதுக்கூட்டங்கள் ஆகியவற்றை நடத்தியது கழகம்.

# எல்லோருக்கும் எல்லாம்

**சு.விஜயபாஸ்கர்** 25

அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம் இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!

## பிரதிநிதித்துவமே சமூக நிலையை மாற்றும்!

*இன்றைய உத்தரப் பிரதேசத்தில், பட்டியலின மக்கள்தொகை 20.70 சதவிகிதம். அவர்களில் 54 சதவிகிதம் ஜாதவ்கள். இன்று அங்கு பட்டியல் சாதியினருக்கு 21 சதவிகித இடஒதுக்கீடு உள்ளது. அன்றைய உத்தரப் பிரதேசம், அதாவது ஐக்கிய மாகாணத்தில் இடஒதுக்கீடு கோரிய உரிமைக்குரல்களின் நிலை என்னவாக இருந்தது?*

வேத கலாச்சாரத்தைக் கற்பிக்கும் நோக்குடன் மும்பையில் சுவாமி தயானந்த சரஸ்வதியால் 1875-இல் தொடங்கப்பட்ட **ஆரிய சமாஜம்,** ஐக்கிய மாகாணத்தில் நன்கு பரவியிருந்தது. சமூகத்தில் கீழ்நிலையில் இருந்த ஜாதவ் மக்களிடம் ஆரிய சமாஜம் பிரச்சாரம் செய்தது. வேத கலாச்சாரத்தைப் பின்பற்றினால், தூய்மை அடைவதுடன், தீண்டாமைக் களங்கத்திலிருந்தும் தப்பிக்கலாம் என்பது ஆரிய சமாஜத் தத்துவம். ஆரிய சமாஜம் தலித் மக்களுக்குக் கல்வி கற்பிப்பதற்காக ஐக்கிய மாகாணத்தில் பல்வேறு பள்ளிகளைத் திறந்தது. இந்தப் பள்ளிகளில் பயின்ற பல ஜாதவ்கள், ஆரிய சமாஜத்தின் தத்துவங்களைப் பரப்பினர்.

இதே காலகட்டத்தில் மெட்ராஸ், பம்பாய் மாகாணங்களில் வேலைவாய்ப்பு, அரசியல் உள்ளிட்ட துறைகளில் ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களை பிரதிநிதித்து வப்படுத்திய இயக்கங்கள் இடஒதுக்கீட்டுக் கோரிக்கையை மையப்படுத்தி இயங்கின. ஐக்கிய மாகாணத்தில் தோன்றிய ஜாதவ் சாதிச் சங்கங்கள் சமூக முன்னேற்றத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்தன. தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்று விரும்பின. தீண்டாமையின் காரணத்தைக் கண்டறிந்து, அவற்றை நீக்க விரும்பின. க்ஷத்திரிய வர்ணத்தைச் சேர்ந்த ஜாதவ்கள் பிற்காலங்களில் நடந்த மாற்றங்களால் வர்ண இறக்கத்தைச் சந்தித்து, தீண்டாமைக் கொடுமைக்கு ஆளாக நேரிட்டது என்று நம்பிய, அந்தச் சாதியினர், மீண்டும் க்ஷத்திரியராக மாறவேண்டும் என்பதற்காக, க்ஷத்திரிய சடங்குகளைப் பின்பற்ற ஆரம்பித்தனர்.

ஆரிய சமாஜம் நடத்திய பள்ளிகளில் பயின்ற ஜாதவ்களும், ஆரிய சமாஜத்தின் கொள்கைகளால் தாக்கம் பெற்ற ஜாதவ் மகாசபாவின் தலைவர்களும் ஆரியமயமாக்கல் என்ற இலக்கை நோக்கிப் பயணித்தனர். க்ஷத்திரியர்கள் என்று ஜாதவ்கள் உரிமை கோரியதை ஆரிய சமாஜம் ஆதரித்தது. ஆரிய சமாஜத்தின் இந்த நோக்கம் ஜாதவ்களை ஆரியமயமாக்குவதாகும். அவ்வாறு செய்வதின் மூலம் அந்தக் காலகட்டத்தில் நடைபெற்று வந்த மதமாற்றத்தை நிறுத்த வேண்டும் என்பது ஆரிய சமாஜத்தின் இலக்கு. ஒருவகையில்



சுவாமி தயானந்த சரஸ்வதி

*‘ஆரிய சமாஜம்’, ‘ஜாதவ் மகா சபா’* ஆகிய இரண்டு அமைப்புகளும் ஆரியமயமாக்கல் எனும் ஒற்றை இலக்கை நோக்கிப் பயணித்தன.

இருப்பினும் அவ்வமைப்புகளின் ஒருங்கிணைந்த பயணம் நெடுங்காலம் நீடிக்கவில்லை. மதமாற்றத்தைத் தடுப்பது மட்டுமே ஆரிய சமாஜத்தின் நோக்கம் என்பதால், வெறுப்படைந்த சுவாமி அச்சூதானந்த் தொடங்கிய ‘ஆதி இந்து’ இயக்கத்தில் ஜாதவ்கள் இணைய ஆரம்பித்தனர். மறுபுறம் 1919-இல் மாண்டேகு- செம்ஸ்போர்டு சீர்திருத்தம் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஐக்கிய மாகாண சட்டப் பேரவையில் ஒற்றை இடத்தை ஒதுக்கியது.

மெட்ராஸ் மாகாணத்தில், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட 20 இடங்களை ஒப்பிடுகையில், ஐக்கிய மாகாணத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் பெற்ற இடம் மிகக் குறைவெனினும், அது ஏற்படுத்திய தாக்கம், 1928-இல் ஆங்கிலேய அரசு அமைத்த சைமன் கமிஷனுக்கு அனைத்திந்திய ஸ்ரீ ஜாதவ் மகா சபா (All India Shri Jatav Mahasabha) அனுப்பிய தீர்மானத்தில் வெளிப்பட்டது. அதில், “ஒரு சமூகத்தின் அரசியல் நிலையில் உண்மையான முன்னேற்றம் இல்லாதவரை, எந்த முன்னேற்றமும் ஏற்படாது என ஜாதவ் மகா சபா நம்புகிறது. அரசு வேலைவாய்ப்பு, நிர்வாகம், அரசியல் துறைகளில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மக்கள்தொகைக்கு ஏற்ப பிரதிநிதித்துவம் அளித்து, அவர்களின் நிலையை மேம்படுத்தினால், ஒடுக்கப்பட்ட மக்கள் சந்தித்து வரும் சமூக அநீதி முடிவுக்கு வரும்” என்று குறிப்பிட்டிருந்தது.

**“ஒரு சமூகத்தின் அரசியல் நிலையில் உண்மையான முன்னேற்றம் இல்லாதவரை, எந்த முன்னேற்றமும் ஏற்படாது என ஜாதவ் மகா சபா நம்புகிறது.**

**...குரல் ஒலிக்கும்**

# மாநாடு

**ர.பிரகாசு** 25

திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...

## என்றும் புகாது இந்தி!

*நாட்டின் எந்தெந்தத் துறைகளில் இந்தித் திணிப்பை வேகமாக்கலாம்? எந்தெந்தத் துறையில் புகுத்தலாம் என்று ஆராய்ந்து, ஒன்றிய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட* **‘கேர் குழு’** *1957-ஆம் ஆண்டில் அறிக்கை ஒன்றை தாக்கல் செய்தது. அதனால், மீண்டும் இந்தி திணிக்கப்படும் அபாயம் உருவானது. உடனே விழித்துக்கொண்டார் பேரறிஞர் அண்ணா. 1938-ஆம் ஆண்டுக்குப் பிறகு மீண்டும் தலைதூக்கிய இந்தித் திணிப்பை வேரோடு சாய்த்திட, உறுதி பூண்டது திராவிட முன்னேற்றக் கழகம்.*

1957-ஆம் ஆண்டு செப்டம்பர் 21-ஆம் தேதி திருவண்ணாமலையில், **‘இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாடு’** கூட்டப்பட்டது. அருணகிரி அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டை சி.வி.எம்.அண்ணாமலை திறந்து வைத்தார். வரவேற்புக் குழுச் செயலாளராக ப.உ.சண்முகம் நியமிக்கப்பட்டார். மாநாட்டில் பேசிய அருணகிரி அடிகளார், “வீட்டைத்தான் துறந்து சென்றேன். என் தாய்நாட்டை, மொழியை, என்னுடைய இனத்தைத் துறந்து சென்றுவிடவில்லை. என்னுடைய இனம்தானே இன்றைக்கும் எனக்குச் சோறு போடுகிறது” என பேசியபோது கூட்டம் நெகிழ்ந்தது.




இந்த மாநாட்டில் அண்ணா ஆற்றிய உரை, இந்தியை ஏன் தமிழ்நாடு எதிர்க்கிறது என்பதற்கான ஆவணமாகத் திகழ்கிறது. இந்தி பேசும் மக்களையே தேடித்தேடிச் சென்று கேர் கமிட்டி அறிக்கை தயாரித்திருந்ததை நக்கலோடு சுட்டிக்காட்டிய அண்ணா,

“பேரீச்சம் பழக் கடைக்காரரிடம் சென்று, பேரீச்சம் பழம் உடலுக்கு நல்லதா என்று கேட்டால், என்ன சொல்லுவான்? மலைவாழைப் பழம் 10 சாப்பிடுவதும் சரி, ஒரு துண்டு பேரீச்சம் பழம் சாப்பிடுவதும் சரி என்று, தனது சரக்கு விற்பனையாக வேண்டுமென்றுதான் பேசுவான். அதுபோல இந்தி நன்மையானதா? கேடு பயப்பதா? அல்லது வேண்டுமா, வேண்டாமா என்று இந்தி பேசுபவர்களிடமே கேட்டால் என்ன பயன்? வங்கத்திலே, மராட்டியத்திலே, கேரளத்திலே, தமிழ்நாட்டிலே ஓட்டெடுத்துக் காட்டுங்கள் பார்க்கலாம்” என சவால் விட்டார் அண்ணா.

இந்தித் திணிப்பைப் பக்குவமாக எதிர்த்து, தமிழ்நாட்டின் மொழியுரிமையை நிறுவ, ஆக வேண்டிய ஆக்கப்பூர்வப் பணிகள் குறித்தும், அண்ணா மிக விரிவான வழிகாட்டு தலை வழங்கினார். அதற்கு முன்பு மற்ற எந்தக் கூட்டத்திலும் அண்ணா பேசியதை விட, அதிக நேரம் இந்த மாநாட்டில் உரையாற்றினார். தி.மு.க-வின் இந்தித் திணிப்பு எதிர்ப்பு அரசியலுக்கு வடிவம் கிடைத்த மாநாடாக இது அமைந்தது.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் இன்றைக்கும் தமிழ்நாடு இந்தித் திணிப்பை எதிர்ப்பதற்கான நியாயமான காரண காரணங்களைக் கொண்டிருப்பது வரலாற்றுப் பொருத்தம்.

“பிற மொழியினர் மீது அரசியல் ஆதிக்கம் செலுத்தவே ‘கேர் கமிட்டி’ அமைக்கப்பட்டுள்ளது” என்றும், “ஒரே ஒரு ஓட்டு மெஜாரிட்டியில் அவசர அவசரமாகவும் பொறுப்பற்ற முறையிலும் நாடாளுமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட மொழி சம்பந்தப்பட்ட விதி அகற்றப்பட வேண்டும்” என்று சொல்லியும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், ஒன்றிய அரசை வலியுறுத்தின.

இந்தித் திணிப்பை இன்றைக்கும் எப்படி தி.மு.கழகம் உறுதியோடு எதிர்க்கிறது என்பதற்கான விளக்கமும் அண்ணாவின் உரையில் இருந்தது. “எங்களுக்கு இந்த உலகில் இரண்டு எஜமானர்கள்தான். ஒன்று மனசாட்சி. மற்றொன்று மக்கள். இவற்றைத் தவிர நாங்கள் அஞ்சும் வேறு பொருள் இல்லை” என்றார். என்றும் குலையாது அந்த உறுதி... அதனால் என்றும் புகாது இங்கு இந்தி..!


**மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் இன்றைக்கும் தமிழ்நாடு இந்தித் திணிப்பை எதிர்ப்பதற்கான நியாயமான காரண காரணங்களைக் கொண்டிருப்பது வரலாற்றுப் பொருத்தம்.**

**...கூட்டம் திரளும்**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

576

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131